**கேரள மாநில அரசு**

**/எதிர்/**

**ரஷீத்**

**(குற்றவியல் மேல்முறையீடு எண் 1321/2018)**

**2018 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30 ஆம் நாள்**

**[மாண்புமிகு நீதியரசர் அபய் மனோகர் சப்ரே மற்றும் மாண்புமிகு நீதியரசர் இந்து மல்ஹோத்ரா]**

*குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973 – பிரிவு 231 (2) – இப்பிரிவின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஒத்திவைப்பு கோரி தாக்கல் செய்த மனு - குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் பாதிக்கப்பட்டவரைத் தடுத்து வைத்து, அவரை சித்திரவதை செய்து பின்னர் கிரிமினல் நோக்கத்துடன் கொன்றனர் என்று அரசு தரப்பு குற்றம்சாட்டியது - விசாரணை நீதிமன்றத்தால் குற்றங்கள் வனையப்பட்டது மற்றும் அரசுத் தரப்பு சாட்சிகள் அழைக்கப்பட்டனர் - நீ.ம.சா.-1-ன் முதல் விசாரணைக்கு பிறகு, 2 முதல் 5 வரையினாலான நீதிமன்ற சாட்சிகளின் முதல் விசாரணை முடிக்கப்படும் வரை, நீ.ம.சா.-1 மற்றும் 2 முதல் 5 வரையினாலான நீதிமன்ற சாட்சிகளின் குறுக்கு விசாரணையை ஒத்திவைக்கக் கோரி, எதிர்மேல்முறையீட்டாளரான 2 ஆம் எதிரியால் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது - எதிர்மேல்முறையீட்டாளரான 2 ஆம் எதிரியால் குறுக்கு விசாரணையை ஒத்திவைப்பதற்கான குறிப்பிட்ட காரணம் எதுவும்*

*வழங்கப்படவில்லை என்பதைக் கண்டறிந்து விசாரணை நீதிமன்றத்தால் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது - அதன் பொருந்தும் தன்மை - தீர்வு: குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973, பிரிவு 231 (2), மற்ற சாட்சி அல்லது சாட்சிகள் விசாரிக்கப்படும் வரை, எந்தவொரு சாட்சியின் குறுக்கு விசாரணையை ஒத்திவைப்பதற்கோ, அல்லது பொருத்தமான வழக்குகளில் எந்தவொரு சாட்சியையும் மேலும் குறுக்கு விசாரணை செய்ய மீண்டும் அழைப்பதற்கோ நீதிபதிக்கு விருப்புரிமை அதிகாரம் (discretion) வழங்குகிறது - நீதித்துறை விருப்புரிமை அதிகாரம் சட்டரீதியான கட்டமைப்பு மற்றும் சூழலுக்கு இணங்கவும், அதே சமயம் நியாயமாக முன்னறியக்கூடிய விளைவுகளை அறிந்தும் பயன்படுத்தப்பட வேண்டும் - குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973, பிரிவு 231 (2)-ன் கீழ் ஒத்திவைப்புக் கோரும் தரப்பினர், நீதிபதியின் விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்குப் போதுமான காரணங்களை வழங்க வேண்டும் மற்றும் ஒத்திவைப்பை ஒரு உரிமையாகக் கோர முடியாது - குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973, பிரிவு 231 (2)-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட ஒரு மனுவை முடிவெடுக்கும்போது, குற்றம் சாட்டப்பட்டவரின் உரிமைகளுக்கும் மற்றும் சாட்சியங்களை முன்வைப்பதற்கான அரசு தரப்பின் உரிமைகளுக்கும் இடையில் ஒரு சமநிலை காணப்பட வேண்டும் - சாட்சிகள் மீது தேவையற்ற செல்வாக்கு செலுத்த வாய்ப்பு, சாட்சி(களுக்கு)*

*அச்சுறுத்தல்கள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் போன்ற காரணிகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் - இந்த வழக்கில் எதிர்மேல்முறையீட்டாளர்களான 2 மற்றும் 7 ஆம் எதிரிகள் மிகவும் செல்வாக்கு மிக்க அரசியல் தலைவர்களாக இருந்ததால், சாட்சி(கள்) மீது தேவையற்ற செல்வாக்கு மற்றும் அச்சுறுத்தல் செலுத்த வாய்ப்புள்ளது - குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973, பிரிவு 231 (2)-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது சரியே - சாட்சியச் சட்டம், 1872 – பிரிவுகள் 135 மற்றும் 138.*

**மேல்முறையீட்டை அனுமதித்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளித்ததாவது -**

**1872 ஆம் ஆண்டு இந்திய சாட்சியச் சட்டம், பிரிவு 138-ன் படி, எந்தவொரு குற்றவியல் விசாரணையிலும், முதலில் சாட்சிகளின் முதல் விசாரணை நடத்தப்பட்டு, அதைத் தொடர்ந்து குறுக்கு விசாரணை மற்றும் தேவைப்பட்டால் மறு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது விதிமுறையாகும். எவ்வாறாயினும், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973, பிரிவு 231 (2), மற்ற சாட்சி அல்லது சாட்சிகள் விசாரிக்கப்படும் வரை, எந்தவொரு சாட்சியின் குறுக்கு விசாரணையை ஒத்திவைப்பதற்கோ, அல்லது பொருத்தமான வழக்குகளில் எந்தவொரு சாட்சியையும் மேலும் குறுக்கு விசாரணை செய்ய மீண்டும் அழைப்பதற்கோ நீதிபதிக்கு விருப்புரிமை அதிகாரம் (discretion)**

வழங்குகிறது. நீதித்துறை விருப்ப அதிகாரம் சட்டரீதியான கட்டமைப்பு மற்றும் சூழலுக்கு இணங்கவும், அதே சமயம் நியாயமாக முன்னறியக்கூடிய விளைவுகளை அறிந்தும் பயன்படுத்தப்பட வேண்டும். குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973, பிரிவு 231 (2)-ன் கீழ் ஒத்திவைப்புக் கோரும் தரப்பினர், நீதிபதியின் விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்குப் போதுமான காரணங்களை வழங்க வேண்டும் மற்றும் ஒத்திவைப்பை ஒரு உரிமையாகக் கோர முடியாது. [பத்தி 7] [596-A-C]

2. குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 231(2)-ன் கீழ் நீதித்துறை விருப்புரிமை அதிகாரம், எந்த அடிப்படையில் பயன்படுத்தப்படலாம் என்பதைக் கூறும் ஒரு குறுகிய அணுகுமுறை (straitjacket formula) இருக்க முடியாது. விருப்புரிமை அதிகாரம் என்பது ஒவ்வொரு வழக்கின் அடிப்படையிலும் பயன்படுத்தப்பட வேண்டும். குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 231 (2)-ன் கீழ் ஒரு நீதிபதிக்கான வழிகாட்டுதல் கொள்கை என்னவென்றால், ஒத்திவைப்புக் கோரும் தரப்பினரின் மனு தள்ளுபடி செய்யப்பட்டால், அவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுமா என்பதைக் கண்டறிவதாகும். [பத்தி 10] [599-F-G]

3. குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 231 (2)-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட ஒரு மனுவை தீர்மானிக்கும்போது, குற்றம் சாட்டப்பட்டவரின்

உரிமைகளுக்கும் மற்றும் சாட்சியங்களை முன்வைப்பதற்கான அரசு தரப்பின் உரிமைகளுக்கும் இடையில் ஒரு சமநிலை காணப்பட வேண்டும். பின்வரும் காரணிகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்: சாட்சி(கள்) மீது தேவையற்ற செல்வாக்கு செலுத்த வாய்ப்பு; சாட்சி(களுக்கு) அச்சுறுத்தல் சாத்தியம்; எதிர் தரப்பினரின் உத்தியை தவிர்க்க, ஒத்திவைக்காதது (non-deferral), அடுத்தடுத்த சாட்சிகள் இதே போன்ற பொருண்மைகளின் மீது சாட்சியமளிப்பதற்கு அவர்களின் சாட்சியத்தைத் தக்கவைக்க உதவும்; முதல் விசாரணை முடிந்த சாட்சியின் நினைவாற்றல் இழப்பு சாத்தியம்; ஒத்திவைப்பு அனுமதிக்கப்பட்டால், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973, பிரிவு 309 (1)-இன் படி, வழக்கில் தாமதம் ஏற்படுதல் மற்றும் சாட்சிகள் கிடைக்காமல் போதல் போன்ற காரணிகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இந்தக் காரணிகள், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973, பிரிவு 231 (2)-ன் கீழ் ஒரு நீதிபதியால் விருப்புரிமை அதிகாரம் பயன்படுத்தப்படுவதை வழிநடத்துவதற்கான விளக்கங்களாக உள்ளன. [பத்தி 11] [599-G-H; 600-A-C]

4. குற்றவியல் வழக்குகளின் விசாரணையின்போது, பின்வரும் நடைமுறை வழிகாட்டுதல்களை விசாரணை நீதிமன்றங்கள் இயன்றவரை பின்பற்ற வேண்டும்: (i) குற்றச்சாட்டுகளை வணைந்த பிறகு, விசாரணையின் தொடக்கத்திலேயே ஒரு விரிவான வழக்கு நாட்காட்டி (detailed case-calendar)

தயாரிக்கப்பட வேண்டும்; (ii) சாட்சிகளின் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை (தேவைப்பட்டால்) நடத்தப்பட வேண்டிய தேதிகளை வழக்கு-நாட்காட்டி குறிப்பிட வேண்டும்; (iii) தரப்பினரால் சாட்சிகளை ஆஜர்படுத்துவதற்கான முன்மொழியப்பட்ட வரிசை, சாட்சிகளை விசாரணைக்க தேவைப்படும் எதிர்பார்க்கப்பட்ட நேரம், தொடர்புடைய நேரத்தில் சாட்சிகள் கிடைப்பது மற்றும் அரசு தரப்பு மற்றும் எதிர் தரப்பு ஆகிய இரண்டின் வசதி போன்றவற்றை இயன்றவரை வழக்கு-நாட்காட்டி கருத்தில் கொள்ள வேண்டும்; (iv) ஒரே பொருள் குறித்து சாட்சியமளிக்கும் சாட்சிகளின் வாக்குமூலம் பெறுவது அருகருகே உள்ள நாட்களில் பட்டியலிடப்பட வேண்டும்; (v) குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973, பிரிவு 231 (2)-ன் கீழ் ஒத்திவைப்பதற்கான கோரிக்கை, வழக்கு-நாட்காட்டியைத் தயாரிப்பதற்கு முன் முன்னுரிமை அளித்துச் செய்யப்பட வேண்டும்; (vi) ஒத்திவைப்பு கோரிக்கையை அனுமதிப்பது, ஒவ்வொரு சாட்சிகள் அல்லது சாட்சிகளின் தொகுப்பின் குறுக்கு விசாரணையை ஒத்திவைப்பதற்குப் போதுமான நியாயமான காரணங்களின் அடிப்படையில் இருக்க வேண்டும்; (vii) எந்தவொரு சாட்சியின் குறுக்கு விசாரணையையும் ஒத்திவைப்பதற்கான கோரிக்கையை அனுமதிக்கும்போது, கோரப்பட்டபடி, அத்தகைய சாட்சிகளின் முதல் விசாரணை முடிந்த பிறகு, அந்த சாட்சியின் குறுக்கு விசாரணைக்கான ஒரு

அருகிலுள்ள தேதியை விசாரணை நீதிமன்றங்கள் குறிப்பிட வேண்டும்; (viii) மேற்கூறிய வழிகாட்டுதல்களின்படி தயாரிக்கப்பட்ட வழக்கு நாட்காட்டியானது, அதிலிருந்து விலகுவது முற்றிலும் அவசியமானால் தவிர, கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும்.; (ix) விசாரணை நீதிமன்றங்கள் ஒத்திவைப்பதற்கான கோரிக்கையை அனுமதித்த வழக்குகளில், சாட்சிகள் தேவையற்ற செல்வாக்கு, துன்புறுத்தல் அல்லது மிரட்டலுக்கு ஆளாகாமல் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். [பத்தி 12] [600-E-G; 601-A-E]

5. தற்போதைய வழக்கில், 2 முதல் 5 வரையினாலான நீதிமன்ற சாட்சிகளின் முதல் விசாரணை முடிக்கப்படும் வரை, 1 முதல் 5 வரையினாலான நீதிமன்ற சாட்சிகளின் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படாவிட்டால், அவருடைய பாதுகாப்பு உத்திக்கு (his defence) பாதிப்பு ஏற்படும் என்று எதிர்மேல்முறையீட்டாளரான 2 ஆம் எதிரியால் எந்த ஆதாரமும் இல்லாத ஒரு வெறுமையான வலியுறுத்தல் வைக்கப்பட்டது. எதிர்மேல்முறையீட்டாளர்களான 2 மற்றும் 7 ஆம் எதிரிகள் "மிகவும் செல்வாக்கு மிக்க அரசியல் தலைவர்களாக" இருந்ததால், சாட்சி(கள்) மீது தேவையற்ற செல்வாக்கு மற்றும் அச்சுறுத்தல் செலுத்த வாய்ப்புள்ளது என்பதன் அடிப்படையில், கூடுதல் அமர்வு நீதிபதியின் உத்தரவை ரத்து செய்வதற்கு உயர் நீதிமன்றம் எந்தக் காரணத்தையும் அளிக்காததால்,

**எதிர்ப்புக்குள்ளான உத்தரவு ரத்து செய்யப்படுவதற்குரியது. எதிர்மேல்முறையீட்டாளரான 2 ஆம் எதிரி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவைத் தள்ளுபடி செய்து கூடுதல் அமர்வு நீதிபதி பிறப்பித்த உத்தரவு மீட்டளிக்கப்படுகிறது. [பத்திகள் 13 மற்றும் 14] [601-E-G]**

*குர்பக்ஷ் சிங் சிபியா மற்றும் பலர் /எதிர்/ பஞ்சாப் மாநில அரசு,* **(1980) 2 எஸ்.சி.சி. 565 : [1980] 3 எஸ்.சி.ஆர்.** 383; *லெப்டினன்ட் கர்னல் எஸ்.ஜே. சௌத்ரி /எதிர்/ மாநில அரசு (டெல்லி நிர்வாகம்),* **(1984) 1 எஸ்.சி.சி. 722: [1984] 2 எஸ்.சி.ஆர்.** 438; *வினோத் குமார் /எதிர்/ பஞ்சாப் மாநில அரசு,* **(2015) 3 எஸ்.சி.சி. 220: [2015] 1 எஸ்.சி.ஆர்.** 504 - **குறிப்பிடப்பட்டது.**

*ஷாமூன் அகமது சயீத் மற்றும் ஒருவர் /எதிர்/ உளவுத்துறை அதிகாரி,* **2009 கிரிமினல் எல்.ஜே.** 1215: **ஐ.எல்.ஆர்.** 2008 **கர்நாடகா** 4378; *சிசிர் தேப்நாத் /எதிர்/ மேற்கு வங்க மாநில அரசு மற்றும் ஒருவர்,* **[குற்றவியல் சீராய்வு மனு எண்** 2533/2017 **ஆகஸ்ட் 2, 2017 அன்று கல்கத்தா உயர் நீதிமன்றத்தால் (மேல்முறையீட்டு பக்கம்) முடிவு செய்யப்பட்டது;** *அமித் குமார் ஷா மற்றும் பலர் /எதிர்/ மேற்கு வங்க மாநில அரசு மற்றும் ஒருவர்,***[குற்றவியல் சீராய்வு மனு எண்.** 3846/2009 **ஜூன் 23, 2010 அன்று கல்கத்தா உயர் நீதிமன்றத்தால் (மேல்முறையீட்டு பக்கம்) முடிவு செய்யப்பட்டது;** *ஸ்ரீ ஷங்கர் /எதிர்/*

*மாநில அரசு சார்பாக ஹெப்பகோடி காவல் நிலையம்,* **[கு.ம.எண். 8774/2017 டிசம்பர் 7, 2017 அன்று பெங்களூருவில் உள்ள கர்நாடக உயர் நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டது]**: மாசூர் ரஹ்மான் மோல்லா @ மோங்க்லா *மற்றும் பலர் /எதிர்/ மேற்கு வங்க மாநில அரசு மற்றும் பலர்,* **[குற்றவியல் சீராய்வு மனு எண் 2411/2016 ஆகஸ்ட் 10, 2016 அன்று கல்கத்தா உயர் நீதிமன்றத்தால் (மேல்முறையீட்டு பக்கம்) முடிவு செய்யப்பட்டது]**: *ஜெயகர் /எதிர்/ மாநில அரசு சார்பாக ஃப்ரேசர் டவுன் காவல் நிலையம்,* **ஐ.எல்.ஆர். 1996 கர்நாடகா 2783: 1996 (3) கர்நாடகா எல்.ஜே. 747**; *ஆர். செல்வன் /எதிர்/ மாநில அரசு,* **[குற்றவியல் சீராய்வு மனு (MD) எண் 744/2016 ஜனவரி 24, 2017 அன்று சென்னை உயர்நீதிமன்றம், மதுரை அமர்வில் தீர்ப்பளிக்கப்பட்டது]**: 2017 (2) கிரைம்ஸ் 509 மெட்ராஸ்); *பிரதீப் குமார் கோல்ஹே /எதிர்/ மத்திய பிரதேச மாநில அரசு,* **[பல்வகை குற்றவியல் வழக்கு எண் 20240/2018 ஜூலை 11, 2018 அன்று இந்தூரில் உள்ள மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது]**: *மகாராஷ்டிரா மாநில அரசு /எதிர்/ ராஜா ராம் அப்பனா மானே மற்றும் பலர்,* **[குற்றவியல் நீதிப்பேராணை மனு எண். 578/2016 மற்றும் குற்றவியல் மனு எண் 2485/2016 ஆகிய வழக்குகள் ஜனவரி 23, 2017

**அன்று அவுரங்காபாத்தில் உள்ள பாம்பே உயர்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது]**: *முகமது சஞ்சாய் மற்றும் ஒருவர் /எதிர்/ மேற்கு வங்க மாநில அரசு,* 2000 **கிரிமினல் எல்.ஜே.** 608: 2001 (1) **ஆர்.சி.ஆர். (கிரிமினல்)** 431; *லாலு ஆலம் /எதிர்/ மேற்கு வங்க மாநில அரசு,* **[குற்றவியல் சீராய்வு மனு எண்** 385/1996, **ஜூன்** 12, 2002 **அன்று கல்கத்தா உயர் நீதிமன்றத்தால் (மேல்முறையீட்டு பக்கம்) முடிவு செய்யப்பட்டது]**: 2002 (3) **சி.எச்.என்.** 301; *விஜய் குமார் /எதிர்/ மாநில அரசு (தேசிய தலைநகர் டெல்லி அரசு),* **2017 கிரிமினல் எல்.ஜே.** 3875 – **குறிப்பிடப்பட்டது.**

**<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்</u>**

| | | |
|---|---|---|
| [1980] 3 எஸ்.சி.ஆர். 383 | பத்தி 7 | குறிப்பிடப்பட்டது |
| [2015] 1 எஸ்.சி.ஆர். 504 | பத்தி 11 | குறிப்பிடப்பட்டது |
| [1984] 2 எஸ்.சி.ஆர். 438 | பத்தி 11 | குறிப்பிடப்பட்டது |

**குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: குற்றவியல் மேல்முறையீடு எண் 1321/2018.**

குற்றவியல் பல்வகை வழக்கு எண் 171/2018-ல் எர்ணாகுளத்தில் உள்ள கேரள உயர்நீதிமன்றத்தின் 09.01.2018 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து இந்த மேல்முறையீடு எழுகிறது.

மேல்முறையீட்டாளருக்காக - நிஷே ராஜன் ஷாங்கீர், வினு வர்கிஸ் கச்சப்பிள்ளை, அனு கே ஜாய், ஆலிம் அன்வர், ரீகன் எஸ் பெல்.

எதிர்மேல்முறையீட்டாளருக்காக - நிதி.

இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு **மாண்புமிகு நீதியரசர் இந்து மல்ஹோத்ரா** அவர்களால் வழங்கப்பட்டது.

அனுமதி வழங்கப்பட்டது.

1. தற்போதைய குற்றவியல் மேல்முறையீடு சிறப்பு அனுமதி மனு எண் 4653/2018-இலிருந்து எழுகிறது, இதில், குற்றவியல் பல்வகை வழக்கு எண் 171/2018-ல் கேரள உயர்நீதிமன்றம் பிறப்பித்த ஜனவரி 9, 2018 தேதியிட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவு எதிர்க்கப்பட்டது.

2. தற்போதைய குற்றவியல் மேல்முறையீட்டைத் தீர்மானிப்பதற்கான தொடர்புடைய பொருண்மைகள் சுருக்கமாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

2.1. நீ.ம.சா.1 - நாராயணனின் தூண்டுதலின் பேரில், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973 ("**கு.வி.மு.ச.**") பிரிவு 154-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அவர் காவல் துறையிடம் அளித்த அசல் வாக்குமூலத்தின்படி, நீ.ம.சா.1 - நாராயணன் பாதுகாவலராக பணியாற்றிய கட்டிடத்தில் ஒரு பிளாட்டில் வசித்து வந்த கிருஷ்ணபிரசாத், ஆம்புலன்ஸை அழைத்தார். பின்னர்

கிருஷ்ணபிரசாத் மற்றவர்களுடன் சேர்ந்து மயக்கமடைந்த ஒரு நபரை பிளாட்டின் குளியலறையில் இருந்து ஆம்புலன்ஸுக்கு தூக்கிச் சென்றார். மயக்கமடைந்த நபர் பின்னர் சதீசன் என அடையாளம் காணப்பட்டார், அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோது இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. அப்போது, நீ.ம.சா.1 -நாராயணன், கிருஷ்ணபிரசாத் இரண்டு மாதங்களாக அந்த அடுக்குமாடி குடியிருப்பில் தங்கியிருந்ததார் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளரான 2 ஆம் எதிரி, ரஷீத்தின் கூட்டாளி ஆவார் என்றும் வாக்குமூலம் அளித்தார். அந்த பிளாட்டை எதிர்மேல்முறையீட்டாளரான 2 ஆம் எதிரி வாடகைக்கு எடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டது.

2.2. மே 24, 2016 அன்று, 1860 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டம், பிரிவுகள் 302, 343, 212, 201, 202, 118 மற்றும் 109 உடனிணைந்த பிரிவுகள் 120B மற்றும் 34 ஆகியவற்றின் கீழ் இழைத்ததாகக் கூறப்படும் குற்றங்களுக்காக, எதிர்மேல்முறையீட்டாளரான 2 ஆம் எதிரி உட்பட 8 நபர்களுக்கு எதிராக குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு 173-ன் கீழ் காவல்துறையினர் திருச்சூர் நீதித்துறை முதல் வகுப்பு நடுவர் எண் II-ன் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை

தாக்கல் செய்தனர். இறந்த சதீசன் தனது காதலி, நீ.ம.சா.5 - அஜிதாவிடம், வாடகை குடியிருப்புக்குள் நடந்த நடவடிக்கைகள் குறித்தும், எதிர்மேல்முறையீட்டாளரான 2 ஆம் எதிரி மற்றும் 3 ஆம் எதிரி - சாஸ்வதிக்கும் இடையிலான கள்ள உறவு குறித்தும் தகவல் தெரிவித்ததாக கூறப்பட்டது. இந்த விஷயத்தை அறிந்த குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், சதீசனை சட்டவிரோதமாகக் கைது செய்து, துன்புறுத்தி, குற்றவியல் நோக்கத்துடன் கொலை செய்ததாக கூறப்படுகிறது.

2.3. திருச்சூர் கூடுதல் அமர்வு நீதிபதியால் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன. 1 முதல் 5 வரையிலான நீதிமன்ற சாட்சிகள், 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 16 ஆம் தேதி அரசுத் தரப்பு சாட்சிகளாக அழைக்கப்பட்டனர்.

அதே நாளில், நீ.ம.சா.1 - நாராயணனின் முதல் விசாரணை நடத்தப்பட்ட பிறகு, 2 முதல் 5 வரையினாலான நீதிமன்ற சாட்சிகளின் முதல் விசாரணை முடிக்கப்படும் வரை, நீ.ம.சா.-1 மற்றும் 2 முதல் 5 வரையினாலான நீதிமன்ற சாட்சிகளின் குறுக்கு விசாரணையை ஒத்திவைக்கக் கோரி, எதிர்மேல்முறையீட்டாளரான 2 ஆம் எதிரியின் வழக்கறிஞரால், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973, பிரிவு

231 (2)-ன் கீழ் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு அனுமதிக்கப்படவில்லை என்றால், எதிர்மேல்முறையீட்டாளரான 2 ஆம் எதிரியின் பாதுகாப்பு உத்தி அரசுத் தரப்புக்கு வெளிப்படுத்தப்படும் என்பதால், எதிர்மேல்முறையீட்டாளரான 2 ஆம் எதிரியின் வழக்கு மோசமாக பாதிக்கப்படும் என்று மேற்படி மனுவில் கூறப்பட்டுள்ளது.

2.4. குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973, பிரிவு 231 (2)-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவை அரசுத் தரப்பு எதிர்த்து, ஒரு பதிலை சமர்ப்பித்தது, அதில், 1 முதல் 5 வரையிலான நீதிமன்ற சாட்சிகள் ஒரே பொருள் தொடர்பாக சாட்சியம் அளிக்கவில்லை என்று கூறப்பட்டிருந்தது. குறுக்கு விசாரணையை ஒத்திவைப்பது அரசுத் தரப்பு சாட்சியத்தை மோசமாக பாதிக்கும் என்று மேலும் கூறப்பட்டது.

2.5. கூடுதல் அமர்வு நீதிபதி, டிசம்பர் 20, 2017 தேதியிட்ட உத்தரவின் மூலம், எதிர்மேல்முறையீட்டாளரான 2 ஆம் எதிரியின் சார்பாக தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தை தள்ளுபடி செய்தார்.

குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973, பிரிவு 231 (2), மற்ற சாட்சி அல்லது சாட்சிகள் விசாரிக்கப்படும் வரை, எந்தவொரு சாட்சியின் குறுக்கு விசாரணையை ஒத்திவைப்பதற்கு விசாரணை நீதிமன்ற நீதிபதிக்கு விருப்புரிமை அதிகாரத்தை (discretion)

வழங்குகிறது என்று கூடுதல் அமர்வு நீதிபதி கருதினார். குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973, பிரிவு 231 (2), குற்றம் சாட்டப்பட்டவரின் பாதுகாப்பு உத்தி அரசுத் தரப்புக்குத் தெரிய வரும் என்ற அடிப்படையில் ஒட்டுமொத்தமாக ஒத்திவைக்க குற்றம் சாட்டப்பட்டவருக்கு உரிமை வழங்கவில்லை. தற்போதைய வழக்கில், குறுக்கு விசாரணையை ஒத்திவைப்பது, 1872 ஆம் ஆண்டின் இந்திய சாட்சியச் சட்டத்தின் பொதுவான வகையங்களுக்கு எதிரானதாக இருக்கும்.

இந்த வழக்கில் குறுக்கு விசாரணையை ஒத்திவைப்பது, ஏற்கனவே முதல் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட சாட்சிகளின் நினைவாற்றல் இழப்புக்கு வழிவகுக்கும், இது அரசுத் தரப்பின் வழக்கை மோசமாகப் பாதிக்கும் என்று கூடுதல் அமர்வு நீதிபதி கருதினார்.

எதிர்மேல்முறையீட்டாளரான 2 ஆம் எதிரியின் சார்பாக குறுக்கு விசாரணையை ஒத்திவைப்பதற்கான குறிப்பிட்ட காரணம் எதுவும் முன்வைக்கப்படவில்லை என்பதை, எதிர்தரப்பின் உத்தி அரசுத் தரப்புக்கு வெளிப்படுத்தப்படும் என்ற பொதுவான வாக்குமூலத்தைத் தவிர, கூடுதல் அமர்வு நீதிபதி கவனித்தார்.

எதிர்மேல்முறையீட்டாளர்களான 2 மற்றும் 7 ஆம் எதிரிகள் "மிகவும் செல்வாக்கு மிக்க அரசியல் தலைவர்கள்" என்பதால், தத்தம் முதல் விசாரணைக்குப் பிறகு சாட்சிகளுக்கு அச்சுறுத்தல்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளை நிராகரிக்க முடியாது என்று கூடுதல் அமர்வு நீதிபதி கருதினார். மேலும், 1 முதல் 5 வரையிலான நீதிமன்ற சாட்சிகள் வழக்கின் வெவ்வேறு பொருண்மைகள் மற்றும் அம்சங்களின் அடிப்படையில் சாட்சியமளிப்பார்கள் என்று கவனிக்கப்பட்டது.

குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவுகள் 231 (2) மற்றும் 309 ஆகியவற்றின் வகையங்களைக் கருத்தில் கொண்டு, குறுக்கு விசாரணையை ஒத்திவைப்பது ஒரு குற்றவியல் விசாரணையில் ஒரு சாதாரண நடைமுறை அல்ல என்று கூடுதல் அமர்வு நீதிபதி தீர்ப்பளித்து, எதிர்மேல்முறையீட்டாளரான 2 ஆம் எதிரி சார்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவை தள்ளுபடி செய்தார்.

2.6. கூடுதல் அமர்வு நீதிபதியால் டிசம்பர் 20, 2017 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவால் மனக்குறையுற்று, எதிர்மேல்முறையீட்டாளரான 2 ஆம் எதிரி, குற்றவியல்

விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 482-ன் கீழ் குற்றவியல் பல்வகை வழக்கு எண் 171/2018 -ஐ கேரள உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

உயர் நீதிமன்றம் கூடுதல் அமர்வு நீதிபதியின் உத்தரவை ஜனவரி 1, 2018 தேதியிட்ட ஒரு குறுகிய காரணமற்ற மறைபுதிரான உத்தரவின் மூலம் மாற்றியமைத்து, குற்றவியல் பல்வகை வழக்கு எண் 171/2018 -ஐ அனுமதித்தது. 1 முதல் 4 வரையிலான நீதிமன்ற சாட்சிகளின் குறுக்கு விசாரணையை, நீ.ம.சா.-5-ன் முதல் விசாரணை முடியும் வரை ஒத்திவைக்க உத்தரவிடப்பட்டது.

2.7. ஜனவரி 1, 2018 அன்று உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவினால் மனக்குறையுற்று, கேரள அரசு, தற்போதைய சிறப்பு அனுமதி மனு (கு) எண் 4652/2018-ஐ இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

3. குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 231(2)-ன் கீழ் கூடுதல் அமர்வு நீதிபதி தனது விருப்புரிமையைப் பயன்படுத்துவது செல்லுபடியாகுமா மற்றும் சட்டப்பூர்வமாக நிலையானதா என்பதே தற்போதைய குற்றவியல் மேல்முறையீட்டில் பரிசீலனைக்கு எழும் சட்ட எழுவினாவாகும்.

4. 1872 ஆம் ஆண்டு இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவுகள் 135 மற்றும் 138 ஆகியவற்றில் சாட்சிகளை ஆஜர்படுத்துதல் மற்றும் விசாரணை செய்தல் ஆகியவற்றின் வரிசையை நிர்வகிக்கும் சட்டரீதியான கட்டமைப்பு

மற்றவற்றுடன் உள்ளது. பிரிவுகள் 135[1] மற்றும் 138[2] ஆகியவற்றின் கூட்டு வாசிப்பு, எந்தவொரு விசாரணையிலும் - அது உரிமையியல் அல்லது குற்றவியல் என எதுவாக இருந்தாலும் - ஒரு சாட்சியின் முதல் விசாரணை முதலில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே வழக்கமான நடைமுறை என்பதைக் குறிக்கும்; அதைத் தொடர்ந்து அவரது குறுக்கு விசாரணை (எதிர் தரப்பினர் விரும்பினால்), பின்னர் மறு விசாரணை (சாட்சியை அழைக்கும் தரப்பினர் விரும்பினால்) நடைபெறும்.

5. குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 231, மற்ற சாட்சி அல்லது சாட்சிகள் விசாரிக்கப்படும் வரை, ஒரு சாட்சியின் குறுக்கு விசாரணையை

---

1. *"**135. சாட்சிகளை முன்னிலைப்படுத்துவதற்கும் விசாரிப்பதற்குமான வரிசை முறை:** எந்த வரிசை முறையில் சாட்சிகள் முன்னிலைப்படுத்தப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும் என்பது உரிமை வழக்கு மற்றும் குற்றவழக்கு நடைமுறைத் தொடர்பாக முறையே அவ்வப்போதுள்ள சட்டம் மற்றும் நடைமுறைப் பழக்கத்தினாலும், அத்தகைய சட்டம் எதுவும் இல்லையென்றால் நீதிமன்றத்தின் விருப்பத்தேர்வின்படி முறைப்படுத்தப்படுதல் வேண்டும். "*

2. *"**138. விசாரணைகளின் வரிசைமுறை** - முதலில் சாட்சிகள், முதல் விசாரணையும், பின்பு (எதிர்தரப்பினர் அவ்வாறு விரும்புவாரானால்) குறுக்கு விசாரணையும், அதற்கு பின்பு (அவரை அழைக்கின்ற தரப்பினர் அவ்வாறு விரும்புவாரானால்) மறு விசாரணையும் செய்யப்படுதல் வேண்டும்.*

*விசாரணையும் குறுக்கு விசாரணையும் தொடர்புற்ற நிகழ்மைகள் சம்பந்தப்பட்டனவாக இருத்தல் வேண்டும், ஆனால் குறுக்கு விசாரணையானது, தமது முதல் விசாரணையில் சாட்சி வாக்குமூலம் கொடுத்த நிகழ்மைகளின் எல்லைக்குட்பட்டிருக்கத் தேவையில்லை."*

ஒத்திவைப்பதற்கு நீதிபதிக்கு விருப்புரிமை அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதைக் குறிக்கிறது.

பிரிவு 231 கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

"***231. வாதி தரப்புக்கான சாட்சியம்.-***

*(1) அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று, நீதிபதி, வாதி தரப்புக்கு ஆதரவாகத் தாக்கல் செய்யப்படக்கூடிய சாட்சியம் அனைத்தையும் எடுத்துக் கொள்ள முற்படுதல் வேண்டும்.*

*(2) நீதிபதி, தம் விருப்புரிமையின் படி எந்தச் சாட்சியையேனும் குறுக்கு விசாரணை செய்வதை வேறெந்தச் சாட்சி அல்லது சாட்சிகளின் விசாரணை முடியும் வரை ஒத்திப் போட அனுமதிக்கலாம்; அல்லது, மேற்கொண்டு குறுக்கு விசாரணைக்காகச் சாட்சி எவரையும் மீண்டும் கூப்பிடலாம்."*

*(வலியுறுத்தப்பட்டது)*

பிரிவு 231 (2)-ன் சொற்றொடர் குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 242 (3)[3]-ஐ பிரதிபலிக்கிறது, இது குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம்,

---

3. *"242. அரசுத் தரப்புக்கு சாட்சியம்.- .....*

*(3) அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று, நடுவர், வாதி தரப்புக்கு ஆதரவாகத் தாக்கல் செய்யப்படலாகும் சாட்சியம் அனைத்தையும் எடுக்க முற்படுதல் வேண்டும்.*

அத்தியாயம் XIX இன் கீழ் வாரண்ட் வழக்கின் விசாரணையில் ஒரு மாஜிஸ்திரேட்டுக்கு இதேபோன்ற விருப்புரிமையை வழங்குகிறது.

6. பிரிவு 242 (3), ரத்து செய்யப்பட்ட குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1898, பிரிவு 251A (7)-க்கு ஒத்ததாகும் மற்றும் ஒரே மாதிரியான வார்த்தைகளைக் கொண்டுள்ளது. பிரிவு 251A, முந்தைய குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1898 இல், குற்றவியல் விசாரணைமுறைச் சட்ட (திருத்தம்) சட்டம், 1955 (சட்டம் எண் 26/1955) மூலம் சேர்க்கப்பட்டது.

1995 ஆம் ஆண்டு குற்றவியல் விசாரணைமுறைச் சட்ட (திருத்தம்) சட்டத்தின் நோக்கங்கள் மற்றும் காரணங்களின் அறிக்கை, வாரண்ட் வழக்குகளில் நடைமுறைகளை எளிமைப்படுத்துவதற்கும், குற்றவியல் நீதித்துறை அலுவல்களை விரைவாக முடிப்பதை உறுதி செய்வதற்கும், சாட்சிகளுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைப்பதற்கும் மற்றும்தவிர்க்க முடியாத காரணத்தைத் தவிர, நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள சாட்சிகளின் விசாரணையின்றி, வழக்கு ஒத்திவைப்புகள் அனுமதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்கும் மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன என்று பரிந்துரைக்கிறது.

---

*இருப்பினும், நடுவர் சாட்சி எவரையேனும் குறுக்கு விசாரணை செய்வதை வேறு சாட்சி அல்லது சாட்சிகளின் விசாரணை முடியும் வரை ஒத்திப்போடுவதற்கு அனுமதியளிக்கலாம்; அல்லது மேற்கொண்டு குறுக்கு விசாரணக்காகச் சாட்சி எவரையேனும் மீண்டும் கூப்பிடலாம். "*

கர்நாடக உயர் நீதிமன்றம், *ஷாமூன் அகமது சயீத் மற்றும் ஒருவர் /எதிர்/ உளவுத்துறை அதிகாரி*[4] என்ற வழக்கில், மாண்புமிகு நீதியரசர் சாந்தனகவுடர் (அவர் அப்போது வகித்த பதவியின்படி) வழங்கிய தீர்ப்பில், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 231 (2) மற்றும் பிரிவு 242 (3) ஆகியவை 1898 ஆம் ஆண்டு குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு 251A இயற்றப்பட்டதன் பின்னணியில் உள்ள சட்ட நோக்கத்தின் வெளிச்சத்தில் விளக்கப்பட வேண்டும் என்று கவனித்தது.

7. இந்த விவாதத்திலிருந்து பெறப்படுவது என்னவென்றால், 1872 ஆம் ஆண்டு இந்திய சாட்சியச் சட்டம், பிரிவு 138-ன் படி, எந்தவொரு குற்றவியல் விசாரணையிலும், முதலில் சாட்சிகளின் முதல் விசாரணை நடத்தப்பட்டு, அதைத் தொடர்ந்து குறுக்கு விசாரணை மற்றும் தேவைப்பட்டால் மறு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது விதிமுறையாகும்.

எவ்வாறாயினும், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973, பிரிவு 231 (2), மற்ற சாட்சி அல்லது சாட்சிகள் விசாரிக்கப்படும் வரை, எந்தவொரு சாட்சியின் குறுக்கு விசாரணையை ஒத்திவைப்பதற்கோ, அல்லது பொருத்தமான வழக்குகளில் எந்தவொரு சாட்சியையும் மேலும் குறுக்கு விசாரணை செய்ய மீண்டும் அழைப்பதற்கோ நீதிபதிக்கு விருப்புரிமை

---

4. 2009 கிரிமினல் எல்.ஜே. 1215: ஐ.எல்.ஆர். 2008 கர்நாடகா 4378

அதிகாரம் (discretion) வழங்குகிறது. நீதித்துறை விருப்ப அதிகாரம் சட்டரீதியான கட்டமைப்பு மற்றும் சூழலுக்கு இணங்கவும், அதே சமயம் நியாயமாக முன்னறியக்கூடிய விளைவுகளை அறிந்தும் பயன்படுத்தப்பட வேண்டும்[5]. குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973, பிரிவு 231 (2)-ன் கீழ் ஒத்திவைப்புக் கோரும் தரப்பினர், நீதிபதியின் விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்குப் போதுமான காரணங்களை வழங்க வேண்டும் மற்றும் ஒத்திவைப்பை ஒரு உரிமையாகக் கோர முடியாது.

குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு 231 (2)-ன் கீழ் உள்ள விருப்புரிமை "விதிவிலக்கான சூழ்நிலைகளில்"[6] மட்டுமே அல்லது "மிகவும் வலுவான ஒரு வழக்கு"[7] நிலைநாட்டப்பட்டால் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்று பல உயர் நீதிமன்றங்கள் கூறியுள்ளன. இருப்பினும், சட்டரீதியான திட்டத்தின்படி சாட்சிகளை ஆஜர்படுத்துதல் மற்றும் விசாரணை

---

5

6. *சிசிர் தேப்நாத் /எதிர்/ மேற்கு வங்க மாநில அரசு மற்றும் ஒருவர்,* [குற்றவியல் சீராய்வு மனு எண் 2533/2017; ஆகஸ்ட் 2, 2017 அன்று கல்கத்தா உயர் நீதிமன்றத்தால் (மேல்முறையீட்டு பக்கம்) முடிவு செய்யப்பட்டது ];

*ஷாமூன் அகமது சயீத் மற்றும் ஒருவர் /எதிர்/ உளவுத்துறை அதிகாரி,* 2009 கிரிமினல் எல்.ஜே. 1215: ஐ.எல்.ஆர். 2008 கர்நாடகா 4378;

7. *அமித் குமார் ஷா மற்றும் பலர் /எதிர்/ மேற்கு வங்க மாநில அரசு மற்றும் ஒருவர்,*[குற்றவியல் சீராய்வு மனு எண். 3846/2009 ஜூன் 23, 2010 அன்று கல்கத்தா உயர் நீதிமன்றத்தால் (மேல்முறையீட்டு பக்கம்) முடிவு செய்யப்பட்டது;

செய்தல் ஆகியவற்றின் வரிசையை முடிவு செய்வது சம்பந்தப்பட்ட தரப்பினரின் பொறுப்பாக இருந்தாலும், நிர்ணயிக்கப்பட்ட நடைமுறையிலிருந்து மாறுவதற்கு போதுமான காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டால், ஒரு நீதிபதிக்கு குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு 231 (2)-ன் கீழ் உள்ள தனது விருப்புரிமையை பயன்படுத்த சுதந்திரம் உள்ளது.

8. உத்தியை வெளிப்படுத்துவதால் ஏற்படும் பாரபட்சத்தைத் தவிர்ப்பதற்காக, குறுக்கு விசாரணையை ஒத்திவைப்பதற்கான விருப்புரிமையைப் பயன்படுத்த உயர் நீதிமன்றங்கள் ஒப்புதல் அளித்த சூழ்நிலைகள் பின்வருமாறு:

- சாட்சிகள் ஒருவருக்கொருவர் தொடர்புடையவர்களாக இருந்து, ஒரே பொருள் மற்றும் பொருண்மைகளைக் குறித்து சாட்சியமளிக்க வேண்டியிருந்த போது;[8]

---

8. *ஸ்ரீ ஷங்கர் /எதிர்/ மாநில அரசு சார்பாக ஹெப்பகோடி காவல் நிலையம்,* [கு.ம.எண். 8774/2017 டிசம்பர் 7, 2017 அன்று பெங்களூருவில் உள்ள கர்நாடக உயர் நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டது];

*மாசூர் ரஹ்மான் மோல்லா @ மோங்க்லா மற்றும் பலர் /எதிர்/ மேற்கு வங்க மாநில அரசு மற்றும் பலர்,* [குற்றவியல் சீராய்வு மனு எண் 2411/2016 ஆகஸ்ட் 10, 2016 அன்று கல்கத்தா உயர் நீதிமன்றத்தால் (மேல்முறையீட்டு பக்கம்) முடிவு செய்யப்பட்டது];

ஜெயகர் /எதிர்/ மாநில அரசு சார்பாக ஃப்ரேசர் டவுன் காவல் நிலையம், ஐ.எல்.ஆர். 1996 கர்நாடகா 2783: 1996 (3) கர்நாடகா எல்.ஜே. 747;

- சாட்சிகள் ஒரே மாதிரியான பொருண்மைகளைப் பற்றி சாட்சியமளிக்க வேண்டியிருந்த போது.[9]

குறுக்கு விசாரணையை ஒத்திவைப்பதற்கான கோரிக்கை நிராகரிக்கப்பட்ட சூழ்நிலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

- ஒத்திவைப்புக்கான காரணம், சாட்சிகளுக்கு இடையே உறவு உள்ளது என்பது மட்டுமேயாக இருந்தபோது;[10]
- எதிர்தரப்பின் உத்தி வெளிப்படுத்தப்படுவதால் பாதிப்பு ஏற்படும் என்ற கூற்றுக்கு ஆதரவாக குறிப்பிட்ட காரணங்கள் எதுவும் கொடுக்கப்படாதபோது;[11]

---

9. *ஆர். செல்வன் /எதிர்/ மாநில அரசு,* [குற்றவியல் சீராய்வு மனு (MD) எண் 744/2016 ஜனவரி 24, 2017 அன்று சென்னை உயர்நீதிமன்றம், மதுரை அமர்வில் தீர்ப்பளிக்கப்பட்டது]: 2017 (2) கிரைம்ஸ் 509 மெட்ராஸ்);

10. *சிசிர் தேப்நாத் /எதிர்/ மேற்கு வங்க மாநில அரசு மற்றும் ஒருவர்,* [குற்றவியல் சீராய்வு மனு எண் 2533/2017 ஆகஸ்ட் 2, 2017 அன்று கல்கத்தா உயர் நீதிமன்றத்தால் (மேல்முறையீட்டு பக்கம்) முடிவு செய்யப்பட்டது;

11. *பிரதீப் குமார் கோல்ஹே /எதிர்/ மத்திய பிரதேச மாநில அரசு,* [பல்வகை குற்றவியல் வழக்கு எண் 20240/2018 ஜூலை 11, 2018 அன்று இந்தூரில் உள்ள மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது];

*மகாராஷ்டிரா மாநில அரசு /எதிர்/ ராஜா ராம் அப்பனா மானே மற்றும் பலர்,* [குற்றவியல் நீதிப்பேராணை மனு எண். 578/2016 மற்றும் குற்றவியல் மனு எண் 2485/2016 ஆகிய வழக்குகள் ஜனவரி 23, 2017 அன்று அவுரங்காபாத்தில் உள்ள பாம்பே உயர்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது];

- எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்ற நிலையில்.[12]

9. டெல்லி உயர் நீதிமன்றம், விஜய் குமார் /எதிர்/ மாநில (தேசிய தலைநகர் டெல்லி அரசு)[13] என்ற வழக்கில், குற்றவியல் விசாரணைகளை நடத்துவதற்கு

---

*அமித் குமார் ஷா மற்றும் பலர் /எதிர்/ மேற்கு வங்க மாநில அரசு மற்றும் ஒருவர்*,[குற்றவியல் சீராய்வு மனு எண். 3846/2009 ஜூன் 23, 2010 அன்று கல்கத்தா உயர் நீதிமன்றத்தால் (மேல்முறையீட்டு பக்கம்) முடிவு செய்யப்பட்டது;

*முகமது சஞ்சாய் மற்றும் ஒருவர் /எதிர்/ மேற்கு வங்க மாநில அரசு*, 2000 கிரிமினல் எல்.ஜே. 608: 2001 (1) ஆர்.சி.ஆர். (கிரிமினல்) 431;

12. லாலு ஆலம் /எதிர்/ குற்றவியல் சீராய்வு எண். 385/1996; கல்கத்தா உயர் நீதிமன்றம் (மேல்முறையீட்டுப் பிரிவு) 12 ஜூன் 2002 அன்று தீர்ப்பளித்தது : 2002 (3) CHN 301 என்ற வழக்கில் கல்கத்தா உயர்நீதிமன்றம் குறிப்பிட்டதாவது:

> *"... எனவே, இந்த வழக்கில் மனுதாரரால் எடுக்கப்பட்ட வாதம் என்னவென்றால், இதே விஷயத்தில் பெயரிடப்பட்ட மற்ற சாட்சிகளின் முதல் விசாரணைக்கு முன் பானர்ஜி அவர்களின் குறுக்கு விசாரணை செய்யப்பட்டால், ஒரு குறையை நிரப்ப அரசுத் தரப்புக்கு நிச்சயமாக வாய்ப்பு கிடைக்கும், ஒரு குற்றவியல் விசாரணையில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு கூடுதல் நன்மை உள்ளது, ஏனெனில், அரசுத் தரப்பு சாட்சிகளின் முந்தைய வாக்குமூலத்தின் நகல்கள், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டப் பிரிவு 161-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் முன்கூட்டியே வழங்கப்படுகின்றன, இதன் மூலம் சாட்சிக் கூண்டில் இருக்கும்போது அரசுத் தரப்பு சாட்சிகள் ஒவ்வொருவரும் என்ன சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதை அவர் தனக்கு சாதகமாக அறிந்து கொள்வது மட்டுமல்லாமல், ஒவ்வொரு சாட்சியும் விசாரணையின் போது அவர்கள் அளித்த முந்தைய வாக்குமூலத்தை மேற்கோள் காட்டி குறுக்கு விசாரணை செய்யும் நன்மையையும் பெறுகிறார். இதுபோன்ற சூழ்நிலையில், இந்த வழக்கில் மற்ற சாட்சிகளை விசாரிப்பதற்கு முன்பு பானர்ஜியின் குறுக்கு விசாரணையை தொடர அனுமதித்தால், தற்போதைய மனுதாரர் மிகவும் பாரபட்சமாக இருப்பார் என்பதையும், இந்த வழக்கில் உள்ள இடைவெளியை நிரப்ப அரசுத் தரப்புக்கு வாய்ப்பு கிடைக்கும் என்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது. (வலியுறுத்தப்பட்டது)*

பயனுள்ள உத்தரவுகளை வகுத்தது. உத்தரவுகள் பாராட்டத்தக்கவை, மேலும் தொடர்புடைய பகுதிகள் கீழே மறுபிரசுரம் செய்யப்படுகின்றன:

> "*42... (vi). ஒருமுறை விசாரணை தொடங்கினால், அது முடிவடையும் வரை தொடர்ந்து நாளுக்கு நாள் நடத்தப்பட வேண்டும் என்பதே சட்டத்தின் எதிர்பார்ப்பு என்பதால், குற்றப்பத்திரிகை பதிவு செய்யப்பட்ட உடனேயே, சாட்சியங்களைப் பதிவு செய்வதற்கு (குறிப்பாக அரசுத் தரப்பு சாட்சியங்களுக்கு) தேவைப்படும் சாத்தியமான நேரத்தை மனதில் வைத்து, சாட்சியங்களைப் பதிவு செய்வதற்கான விரிவான விசாரணைத் தேதிகளின்*

---

கர்நாடக உயர் நீதிமன்றம். ஷமூன் அகமது சயீத் மற்றும் ஒருவர் /எதிர்/ புலனாய்வு அதிகாரி, 2009 கிரிமினல் எல்.ஜே. 1215: ஐ.எல்.ஆர். 2008 கர்நாடகா 4378 என்ற வழக்கில், இதுவரை எந்த பாரபட்சமும் ஏற்படக்கூடாது என்று குறிப்பிட்டிருந்தார்:

> *"... பெரும்பாலான குற்ற வழக்குகளில், ஒன்றுக்கு மேற்பட்ட நேரில் கண்ட சாட்சிகள் இருக்கலாம், நிச்சயமாக ஒன்றுக்கு மேற்பட்ட மஹஜர் சாட்சிகள் இருப்பார்கள். பல வழக்குகள், ஒத்த பொருண்மைகளைப் பற்றி சாட்சியம் அளிக்க வேண்டிய, அதிகாரப்பூர்வ சாட்சியை (official witness) மட்டுமே சார்ந்து இருக்கின்றன. எனவே, ஒவ்வொரு வழக்கிலும் சேதத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் காரணத்தால், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டப் பிரிவு 231(2) அல்லது குற்றவியல் விசாரணைமுறைச் சட்டப் பிரிவு 242(3)-ஐ பயன்படுத்தி, எதிர் தரப்பு மனு தாக்கல் செய்யலாம். ஆனால் அதை நீதிமன்றம் அனுமதிக்க முடியாது. மேற்கூறியபடி, குற்றம் சாட்டப்பட்டவரின் பாதுகாப்பு உத்தி பாரபட்சமாக இருக்காது, ஏனெனில் சாட்சிகளின் முதல் விசாரணை பொதுவாக குற்றவியல் விசாரணைமுறைச் சட்டப் பிரிவு 161-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் அல்லது மஹஜர் போன்றவற்றின் அடிப்படையில் தொடரும். (வலியுறுத்தப்பட்டது)*

13. நீதிப்பேராணை மனு (கு) எண் 1350 of 2017 மற்றும் Crl. M.A. No. 7450 of 2017; ஜூலை 3, 2017 அன்று டெல்லி உயர் நீதிமன்றம் முடிவு செய்தது: 2017 கிரிமினல் எல்.ஜே. 3875

அட்டவணையை தயாரிப்பது விரும்பத்தக்கதாகும். - இந்த அட்டவணை தயாரிப்பில், நீதிமன்றத்தின் விசாரணை நாட்காட்டி மட்டுமின்றி, சாட்சிகளைத் திரட்டி, ஆஜர்படுத்துவதற்கு அரசுத் தரப்புக்குத் தேவைப்படும் நேரம் மற்றும் எதிர்தரப்பு வழக்கறிஞரின் வசதி ஆகியவையும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அப்படி ஒரு அட்டவணை வகுக்கப்பட்டவுடன், அனைத்துத் தரப்பினரும் அதைக் கறாராகக் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள்.

(vii) மேலே குறிப்பிட்டுள்ளபடி, அரசுத் தரப்புக்கான சாட்சியங்களைப் பதிவு செய்வதற்கான தேதி அட்டவணையைத் தயாரிக்கும் போது, தலைமை வகிக்கும் நீதிபதி அரசு தரப்பிடம், அதன் சாட்சிகளை எந்த வரிசையில் விசாரிக்க விரும்புகிறது, மேலும் ஒரே பொருண்மைகள் அல்லது நிகழ்வுகள் தொடர்பான சாட்சிகளை ஒரே தொகுப்பாக ஒரே தேதிகளில் விசாரிக்க ஒன்றாகக் குழுவாக்குவது (clubbing witnesses pertaining to the same facts or events together) குறித்தும் ஆலோசனையைப் பெறுவார்.

(viii) குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு 231 (2) அல்லது பிரிவு 242 (3)-ன் படி, குறிப்பிட்ட சாட்சி(களின்) குறுக்கு

*விசாரணையை ஒத்திவைப்பதற்கான விருப்புரிமையைப் பயன்படுத்த குற்றவியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பைப் பயன்படுத்த எதிர் தரப்பு விரும்பினால், சாட்சிகள் அழைக்கப்பட வேண்டிய வரிசையை சரியான முறையில் தீர்மானிக்கும் வகையில் அட்டவணையை அமைக்கும் கட்டத்தில் தலைமை வகிக்கும் நீதிபதிக்கு தெரிவிக்க வேண்டும், இது குறுக்கு விசாரணைக்கான குறுகிய ஒத்திவைப்பை (தேவைப்படும்போது) எளிதாக்கவும், இதனால் சாட்சியங்களின் பதிவு நாளுக்கு நாள் தடையின்றி தொடரவும் வழிவகுக்கும், இதன் மூலம் சாட்சிகள் மீது தேவையற்ற செல்வாக்கு செலுத்தவோ அல்லது சாட்சிகளை அச்சுறுத்தவோ தவறாகப் பயன்படுத்தப்படும் நீண்டகால ஒத்திவைப்புகளைத் தவிர்க்க முடியும்.*

*ix) சாட்சிகளை தேவையற்ற செல்வாக்கு அல்லது மிரட்டல் தந்திரங்கள் அல்லது துன்புறுத்தல்களிலிருந்து பாதுகாக்க, சூழ்நிலை கோரினால், தகுந்த நடவடிக்கைகளை எடுப்பது குற்றவியல் நீதிமன்றத்தின் தலைமை வகிக்கும் நீதிபதியின் கட்டாய கடமையாகும். குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு 231 (2) அல்லது பிரிவு 242 (3)-ன் படி, ஒரு குறிப்பிட்ட சாட்சியின் குறுக்கு விசாரணையை ஒத்திவைக்க நீதிமன்றம் அனுமதித்தாலும், அது*

*அத்தகைய குறுக்கு விசாரணை காலவரையின்றி ஒத்திவைக்கப்பட வேண்டும் அல்லது மிக தூர தேதிக்கு திட்டமிடப்பட வேண்டும் என்று அர்த்தமல்ல. ஒத்திவைக்கப்பட்ட குறுக்கு விசாரணையானது, எந்த சாட்சியின் விசாரணைக்கு முன்னதாக அத்தகைய நடவடிக்கை கோரப்பட்டதோ, அந்த சாட்சியின் விசாரணை முடிந்த உடனேயே, அப்போது நடைபெற்று வரும் அட்டவணையில் மேற்கொள்ளப்படுவதை நீதிமன்றம் உறுதி செய்ய வேண்டும்."*

10. குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 231(2)-ன் கீழ் நீதித்துறை விருப்புரிமை அதிகாரம், எந்த அடிப்படையில் பயன்படுத்தப்படலாம் என்பதைக் கூறும் ஒரு குறுகிய அணுகுமுறை (straitjacket formula) இருக்க முடியாது. விருப்புரிமை அதிகாரம் என்பது ஒவ்வொரு வழக்கின் அடிப்படையிலும் பயன்படுத்தப்பட வேண்டும். குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 231 (2)-ன் கீழ் ஒரு நீதிபதிக்கான வழிகாட்டுதல் கொள்கை என்னவென்றால், ஒத்திவைப்புக் கோரும் தரப்பினரின் மனு தள்ளுபடி செய்யப்பட்டால், அவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுமா என்பதைக் கண்டறிவதாகும்.

11. குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 231 (2)-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட ஒரு மனுவை தீர்மானிக்கும்போது, குற்றம் சாட்டப்பட்டவரின்

உரிமைகளுக்கும் மற்றும் சாட்சியங்களை முன்வைப்பதற்கான அரசு தரப்பின் உரிமைகளுக்கும் இடையில் ஒரு சமநிலை காணப்பட வேண்டும்.

- சாட்சி(கள்) மீது தேவையற்ற செல்வாக்கு செலுத்த வாய்ப்பு;
- சாட்சி(களுக்கு) அச்சுறுத்தல் சாத்தியம்;
- எதிர் தரப்பினரின் உத்தியை தவிர்க்க, ஒத்திவைக்காதது (non-deferral), அடுத்தடுத்த சாட்சிகள் இதே போன்ற பொருண்மைகளின் மீது சாட்சியமளிப்பதற்கு அவர்களின் சாட்சியத்தைத் தக்கவைக்க உதவும்;
- முதல் விசாரணை முடிந்த சாட்சியின் நினைவாற்றல் இழப்பு சாத்தியம்;
- ஒத்திவைப்பு அனுமதிக்கப்பட்டால், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973, பிரிவு 309 (1)-இன் படி, வழக்கில் தாமதம் ஏற்படுதல் மற்றும் சாட்சிகள் கிடைக்காமல் போதல்;

போன்ற காரணிகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இந்தக் காரணிகள், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 231 (2)-ன் கீழ் ஒரு நீதிபதியால் விருப்புரிமை அதிகாரம் பயன்படுத்தப்படுவதை வழிநடத்துவதற்கான விளக்கங்களாக உள்ளன.

12. குற்றவியல் வழக்குகளின் விசாரணையின்போது, பின்வரும் நடைமுறை வழிகாட்டுதல்களை விசாரணை நீதிமன்றங்கள் இயன்றவரை பின்பற்ற வேண்டும்:

(i) குற்றச்சாட்டுகளை வனைந்த பிறகு, விசாரணையின் தொடக்கத்திலேயே ஒரு விரிவான வழக்கு நாட்காட்டி (detailed case-calendar) தயாரிக்கப்பட வேண்டும்;

(ii) சாட்சிகளின் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை (தேவைப்பட்டால்) நடத்தப்பட வேண்டிய தேதிகளை வழக்கு-நாட்காட்டி குறிப்பிட வேண்டும்;

(iii) தரப்பினரால் சாட்சிகளை ஆஜர்படுத்துவதற்கான முன்மொழியப்பட்ட வரிசை, சாட்சிகளை விசாரணைக்கு தேவைப்படும் எதிர்பார்க்கப்பட்ட நேரம், தொடர்புடைய நேரத்தில் சாட்சிகள் கிடைப்பது மற்றும் அரசு தரப்பு மற்றும் எதிர் தரப்பு ஆகிய இரண்டின் வசதி போன்றவற்றை இயன்றவரை வழக்கு-நாட்காட்டி கருத்தில் கொள்ள வேண்டும்;

(iv) ஒரே பொருள் குறித்து சாட்சியமளிக்கும் சாட்சிகளின் வாக்குமூலம் பெறுவது அருகருகே உள்ள நாட்களில் பட்டியலிடப்பட வேண்டும்;

(v) குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 231 (2)-ன் கீழ் ஒத்திவைப்பதற்கான கோரிக்கை, வழக்கு-நாட்காட்டியைத் தயாரிப்பதற்கு முன்பு முன்னுரிமை அளித்துச் செய்யப்பட வேண்டும்;

(vi) ஒத்திவைப்பு கோரிக்கையை அனுமதிப்பது, ஒவ்வொரு சாட்சிகள் அல்லது சாட்சிகளின் தொகுப்பின் குறுக்கு விசாரணையை ஒத்திவைப்பதற்குப் போதுமான நியாயமான காரணங்களின் அடிப்படையில் இருக்க வேண்டும்;

(vii) எந்தவொரு சாட்சியின் குறுக்கு விசாரணையையும் ஒத்திவைப்பதற்கான கோரிக்கையை அனுமதிக்கும்போது, கோரப்பட்டபடி, அத்தகைய சாட்சிகளின் முதல் விசாரணை முடிந்த பிறகு, அந்த சாட்சியின் குறுக்கு விசாரணைக்கான ஒரு அருகிலுள்ள தேதியை விசாரணை நீதிமன்றங்கள் குறிப்பிட வேண்டும்;

(viii) மேற்கூறிய வழிகாட்டுதல்களின்படி தயாரிக்கப்பட்ட வழக்கு நாட்காட்டியானது, அதிலிருந்து விலகுவது முற்றிலும் அவசியமானால் தவிர, கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும்.;

(ix) விசாரணை நீதிமன்றங்கள் ஒத்திவைப்பதற்கான கோரிக்கையை அனுமதித்த வழக்குகளில், சாட்சிகளை தேவையற்ற செல்வாக்கு,

துன்புறுத்தல் அல்லது மிரட்டலுக்கு ஆளாகாமல் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

13. தற்போதைய வழக்கில், 2 முதல் 5 வரையினாலான நீதிமன்ற சாட்சிகளின் முதல் விசாரணை முடிக்கப்படும் வரை, 1 முதல் 5 வரையினாலான நீதிமன்ற சாட்சிகளின் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படாவிட்டால், எதிர்மேல்முறையீட்டாளரான 2 ஆம் எதிரியின் பாதுகாப்பு உத்திக்கு (his defence) பாதிப்பு ஏற்படும் என்று எதிர்மேல்முறையீட்டாளரான 2 ஆம் எதிரியின் வழக்கறிஞர் எந்த ஆதாரமும் இல்லாத ஒரு வெறுமையான வலியுறுத்தல் வைக்கப்பட்டது.

எதிர்மேல்முறையீட்டாளர்களான 2 மற்றும் 7 ஆம் எதிரிகள் "மிகவும் செல்வாக்கு மிக்க அரசியல் தலைவர்களாக" இருந்ததால், சாட்சி(கள்) மீது தேவையற்ற செல்வாக்கு மற்றும் அச்சுறுத்தல் செலுத்த வாய்ப்புள்ளது என்பதன் அடிப்படையில், கூடுதல் அமர்வு நீதிபதியின் உத்தரவை ரத்து செய்வதற்கு உயர் நீதிமன்றம் எந்தக் காரணத்தையும் அளிக்காததால், எதிர்ப்புக்குள்ளான உத்தரவு ரத்து செய்யப்படுவதற்குரியது.

14. மேற்கூறிய விவாதத்தைக் கருத்தில் கொண்டு, தற்போதைய குற்றவியல் மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது, மேலும், குற்றவியல் பல்வகை வழக்கு எண் 171/2018-ல் கேரள உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட

ஜனவரி 9, 2018 தேதியிட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. எதிர்மேல்முறையீட்டாளரான 2 ஆம் எதிரியின் சார்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவை தள்ளுபடி செய்து கூடுதல் அமர்வு நீதிபதி பிறப்பித்த டிசம்பர் 20, 2017 தேதியிட்ட உத்தரவு மீட்டளிக்கப்படுகிறது. எவ்வாறாயினும், மேலே கூறப்பட்ட அவதானிப்புகள் விசாரணையின் போது வழக்கின் தகுதியுடன் எந்த தொடர்பும் கொண்டிருக்காது.

அதன்படி உத்தரவிடப்பட்டது.

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

---

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்து கொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."